විශ්‍රාම වැටුප් දෙපාර්තමේන්තුව
ஓய்வூதியத் திணைக்களம்
DEPARTMENT OF PENSIONS
ශ්‍රී ලංකා විශ්‍රාම
இலங்கை ஓய்வு
Sri Lanka Pensions

පරපුරක අභිමානය    தலைமுறையொன்றின் பெருமிதம்    Pride of a Generation

ஓய்வூதிய அறிவுறுத்தல்க் கடித இல. : 05/2019

මගේ අංකය / எனது இல. / My No. ..........    ඔබේ අංකය / உமது இல. / Your No. ..........    දිනය / திகதி / Date 2019.05.28

செயலாளர், கல்வி அமைச்சு,

அனைத்து மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர்கள்,

அனைத்து மாகாண கல்விப் பணிப்பாளர்கள்.

**<u>விதவைகள் / தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியப் பங்களிப்பை முறையாக அறவிடாமை</u>**

கல்வி அமைச்சினூடாக அவ் அமைச்சின் கீழ் உள்ள வலயக் கல்வி அலுவலகங்கள் அடங்கலாக காணப்படும் நிறுவனங்களால் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பப்படும் விண்ணப்பங்களை ஆராய்கையில் விதவைகள் / தபுதாரர் மற்றும் அநாதைகள் நிதியத்தில் பதிவு செய்யப்படாமை மற்றும் அதற்கான அறவீடுகளை மெற்கொள்ளாமை போன்ற சம்பவங்கள் கண்டறியப்பட்டுள்ளன. மேலும் ஓய்வூதியத்தை ஆரம்பிக்கும் நேர்காணலில் விதவைகள் / தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய பங்களிப்பை பெண் அலுவலர்கள் பெற்றுக்கொண்ட போதும் இலக்கம் வழங்கப்பட்ட நாளில் இருந்து விதவைகள் / தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய பங்களிப்பு அறவிடப்படாத நிலையிலேயே பல சந்தர்ப்பங்களில் ஓய்வூதிய விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

2. அச் சம்பவங்களில், மாதாந்த ஓய்வூதியத்தைச் செயற்படுத்தும் நேர்காணலில், விதவைகள் / தபுதாரர் மற்றும் அநாதைகள் பங்களிப்புக்களுக்கான அறவீட்டை முழுமையாக மேற் கொள்ளாமை தொடர்பில் உறுதிப்படுத்துவதற்கான கடிதத்தை அனுப்புவதற்கு ஓய்வூதியக் கோவைகளைப் பரிசீலிக்கும் போது அவ்அறவீட்டை மேற் கொள்ளப்படாமை கண்டறியப்பட்ட பின்னர், பணிக் கொடையில் அறவிடுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்ட சந்தர்ப்பங்களும் கண்டறியப்பட்டுள்ளன.
3. ஆகையால், ஓய்வு பெறும் அலுவலரது பூரணப்படுத்தப்பட்ட ஓய்வூதிய விண்ணப்பத்தை ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு முன்னர், தொடர்புடைய அலுவலரால் விதவைகள் / தபுதாரர் மற்றும் அநாதைகள் நிதிக்கு பங்களிக்கப்பட்டுள்ளதா அத்துடன் முழுமையாக அறவிடப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.
4. மேலும், இவ்விடயம் தொடர்பில் அனைத்து அலுவலர்களிற்கும் தெளிவுபடுத்துமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். இதனகத்துப் பின்னர் பங்களிப்புகள் செலுத்தப்படாத சந்தர்ப்பங்கள் கண்டறியப்பட்டால், ஓய்வூதியப்பதிவிற்காக தங்களால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்படும்.

ஒப்பம்
ஏ. ஜகத் டி டயஸ்
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்.

මාළිගාවත්ත, කොළඹ 10. மாளிகாவத்தை கொழும்பு 10. Maligawatta, Colombo 10.
Hot line: 1970, Direct line: 2209800, Fax: 2342078, Email: info@pensions.gov.lk, Web: www.pensions.gov.lk